# எம். பி. க்களும் 'சமபள' உயர்வு கோருவர்

கொழும்பு, வெள்ளி

தங்களுக்கு வழங்கப்படும் அலவன்ஸை அதிகரிக்கும்படி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கூட்டாக கோரவிருக்கின்றனர்.

அலவன்ஸை அதிகரிப்பது சம்பந்தமாக ஆட்சிமன்றத்தில் ஒரு பிரேரணையைக் கொண்டுவரவும் இவர்கள் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

தற்பொழுது இவர்களுக்கு அலவன்ஸ் பணமாக மாதம் 750 ரூபா கிடைப்பது போதாதென எம். பி.க்கள் மத்தியில் அபிப்பிராயம் நிலவிவருகிறதாம்.

நாளாந்தம் செலவுகள் அதிகரித்து வருவதால் தங்கள் அலவன்ஸை அதிகரிக்கும்படி கோருவது நியாயமானதென ஒரு எம். பி. தெரிவித்தார்.

அலவன்ஸை அதிகரிப்பது பற்றி முன்னரும் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது நிறைவேறவில்லை.

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 153
தேசிய தினசரி

நாவலர்வீதி எண் 19
போன் 889
National Tamil Daily

யாழ்ப்பாணம் சௌ. ஆனி 30 ரபி: ஆகிர் 16 சனிக்கிழமை (13 7-68)

## நேற்று சென்னையில் 9 தீ விபத்துக்கள்

சென்னை, ஜூலை 12

நேற்று மாலை, தேனாம்பேட்டையில் நடந்த தீ விபத்தொன்றில், தீயணைக்கும் படையைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத் தீவிபத்தில் 160 குடிசைகள் எரிந்துவிட்டன.

நேற்றுக்காலை வடசென்னையில் நடைபெற்ற மற்றுமொரு தீ விபத்தில் 21 குடிசைகள் எரிந்துபோயின.

# ஆலயப்பிரவேசத்துக்கு புதிய சட்டம் வேண்டும்

## அரசாங்கக் கொள்கை அறிக்கை வெளியிட யோசனை

### இந்து ஆலோசனைச்சபை பிரதமரை கோருகிறது

கொழும்பு, வெள்ளி

**ஹரிஜனர்களின் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக அரசாங்கம் ஒரு கொள்கை அறிக்கை வெளியிட வேண்டும் என்று இந்து சமய விவகார ஆலோசனைச்சபைத் தூதுக்குழு சனிக்கிழமை காலை பிரதமரைச் சந்தித்துக் கேட்கவிருக்கிறது. ஹரிஜனர்கள் இந்து ஆலயங்களுக்குள் சென்று வழிபடுவதற்கு உரிமையளிக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் தூதுக்குழு பிரதமரைக் கேட்டுக் கொள்ளவிருக்கிறது.**

வடபகுதியில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நிலைமையைத் தொடர்ந்து இந்து சமய விவகார ஆலோசனைசபைத் தூதுக்குழு பிரதமரைச் சந்தித்து ஆலயப்பிரவேசப் பிரச்னை தீண்டாமை ஒழிப்புப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து யோசனை தெரிவிக்கவிருக்கிறது.

ஆலயங்களுக்குள் சகல சமூகங்களைச் சேர்ந்த மக்களும் சுதந்திரமாக செல்வதற்கு ஏற்றவகையில் ஆட்சி மன்றத்தில் சட்டம் கொண்டுவரப் படவேண்டுமென இத்தூதுக்குழு பிரதமரை வற்புறுத்துமெனத் தெரிகிறது.

பிரதமரைச் சந்திக்கும் தூதுக்குழுவில் திரு. எஸ். சோமசுந்தரம், திரு. அரங்கநாதன், சுப்ரீம் கோர்ட் ரிஜிஸ்தார் திரு. என். நவரத்தினம், சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கம், திரு. ஆர். சபாநாயகம், திரு. சி. டி. மோடி, வழக்கறிஞர் எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

வடக்கில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் பிரதமரை இத் தூதுக்குழு கேட்டுக் கொள்ளும்.

செனட் சபையில்

## அமைச்சர் 'திரு'வுக்கு மூன்று கேள்விகள்

### செனட்டர் அமீம் விடுத்தார்

கொழும்பு, வெள்ளி

சமஷ்டிக்கட்சியினர் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார்களா? சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார்களா? இலங்கையைப் பிரிக்காத நடுநிலையான ஓர் அரசாங்கம் நிலைபெறுவதை அவர்கள் ஆதரிக்கத்தயாரா?

இந்த மூன்று கேள்விகளும் இன்று செனட் சபையில் உள்ளூராட்சி அமைச்சருக்கு விடுக்கப்பட்டன.

இந்தக் கேள்விகளை விடுத்தவர் செனட்டர் ஏ. ஆர். எம். அமீம்.

சிம்மாசனப் பிரசங்கத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு செனட்டர் அமீம் பேசினார்.

காலஞ்சென்ற எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா சமஷ்டி ஆட்சிக்கு ஒருபோதுமே ஒப்புக்கொள்ளவில்லை. எல்லா மக்களும் சம உரிமைகளுடன் வாழவேண்டும் என்றுதான் அவர் விரும்பினார். ஆனால் சமஷ்டிக்கட்சியினரின் போக்குத்தான் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா சமஷ்டிக்கொள்கைக்கு விட்டுக்கொடுத்து விட்டார். இந்த அர்த்தமற்ற மாவட்ட சபைகளை மக்கள் ஆதரிக்கவில்லையென்பதற்குச் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட தோல்வியே போதுமான சாட்சியமாகும் என்று செனட்டர் அமீம் கூறினார்.

## பத்து அரசியற் தலைவர்க்கு மரணதண்டனை

சைகோன், ஜூலை 12

தென்வியட்னாமில், புதிய அரசியற் கட்சியொன்றைச் சேர்ந்த 10 தலைவர்கள், இராணுவ நீதிமன்றமொன்றினால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். நாட்டுக்கெதிராகச் சதி செய்ததாக இவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இவர்களின் உடமைகளையும் பறிமுதல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கன்னாகம் மின்சார நிலைய

## மேலதிகாரிகள் மூவருக்கு பிணை

### ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவு

யாழ்ப்பாணம், சனி

சுன்னாகம் மின்சார நிலையத்தைச் சேர்ந்த 3 மேலதிகாரிகளை மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் தலா 500 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இங்கு கடமையாற்றிக்கொண்டிருக்கையில் மரணமான மின்சார நிலைய ஊழியரான தர்மசேனவின் மரண விசாரணையின் பின்னர் மேலதிகாரிகளான துரைசிங்கம், சிவநேசன், ஸ்ரீவர்த்தன ஆகிய மூவரினதும் கவலையீனத்தால்தான் இம்மரணம் நேர்ந்ததாகக் குறிப்பிட்ட பின்னரே இவர்களை மரண விசாரணை அதிகாரி பிணையில் விடுதலைசெய்தார்.

சம்பந்தப்பட்ட மூவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மின்சார இலாகா மேலிடத்துக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி பொலிஸாரை மேலும் விசாரணையை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (ஈ. நி.)

## நூற்றுக்கணக்கான பேனுக்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், சனி

வெளிநாட்டிலிருந்து கடத்தப்பட்டதாகக் கருதப்படும் நூற்றுக்கணக்கான பேனுக்களை, யாழ்ப்பாணப் பொலிஸாரும், சுங்கப்பகுதியினரும் யாழ்ப்பாணத்திலுள்ள கடையொன்றிலிருந்து நேற்றுக் கைப்பற்றினர்.

## பிரதமர்கள் மாநாடு

லண்டன், ஜூலை 12

காமன்வெல்த் பிரதமர்களின் அடுத்த மநாடு 1969 ஜனவரி மாதம் 15ந் தேதி லண்டனில் ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'தமிழர் பிரச்னைதீர கட்சிகள் ஒன்றுபட வேண்டும்'

### காங்கேசன்துறையில் உபசபாநாயகர்

காங்கேசன்துறை, வெள்ளி

"தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க தமிழ் கட்சிகள் ஒன்றுபடவேண்டும். கட்சிகள் ஒன்றுபட்டால் மக்கள் தாமாகவே ஒன்றுபடுவார்கள்."

உடுப்பிட்டி எம். பி.யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் காங்கேசன்துறையில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில்; கட்சிகள் ஒன்றுபடத் தேவையில்லை, மக்கள் ஒன்றுபட்டால் போதும் என்று சிலர் கூறுவதில் அர்த்தமில்லை. கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டால் தமிழர் பிரச்னையைத் தீர்க்க வழி பிறந்துவிடும்" என்றார்.

திரு. ஆ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உபசபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் இனத்திற்கு இது ஒரு சோதனைக்காலம். தமிழர் விழிப்புடன் இருக்க வேண்டிய காலம் இதுதான்.

சிங்களத் தேர்ச்சி பற்றிய அறிக்கை வெளிவந்ததும் நாம் எமது பிரதம மந்திரிக்கு மனிதாபிமானத்துட

[6ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

சுயநலத்தை விட்டு, பிறர் நலத்துக்காகப் பாடுபடுவதே, நிரந்தர இன்பத்துக்கு உறுதியான வழி. எல்லாரிடமும் கடவுளைக் காணும் போதே, இவ்வித மனப்பக்குவம் ஏற்பட முடியும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

... National Tamil Daily
... K.K.S. ROAD
Post Box 49 Jaffna
Telephone 389

[illegible] கீலக வருஷம் ஆனி மாதம் 30-ந் திகதி (13-7-68)

## நம்பிக்கை தரும் குரல்

'ஒருவர் தன்னுடைய மொழி, மதம், பண்பாடு ஆகியவை பற்றி பெருமை கொள்ளவேண்டியதுதான். அதே சமயம் மற்றவர்களின் மொழி, மதம், பண்பாடு ஆகியவைகளையும் மதித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும்' என்று இலங்கை தேசிய உயர்கல்விச் சபைத் தலைவரும் கல்விமானுமான டாக்டர் ஜி. பி. மலலசேகரா யாழ்ப்பாணத்தில் ஒரு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது குறிப்பிட்டிருந்தார். உலகம் சுருங்கி உலகமே ஒரு குடும்பமாக வாழவேண்டுமென்ற நிலை உருவாகிவரும் இந்நாளில் கூட மற்றவர்களின் மொழி, மதம், பண்பாடு ஆகியவைகளை மதித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும், அறிவுரை கூற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நமது நாடு இருந்து கொண்டிருக்கிறது எனினும் டாக்டர் மலலசேகரா போன்ற கல்விமான்கள் தமது கருத்தை துணிந்து கூறிவருவது எதிர்காலம்பற்றி நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது.

எந்தச் சிறிய விஷயத்தையும் அரசியலுடன் சேர்த்துப் பெரும்பிரச்னையாக்கி குழப்பிக்கொண்டிருப்பதுடன் எதையும் தேசியக் கண்கொண்டு பார்க்காமல் எதற்கும் வகுப்புவாத முத்திரை குத்தும் மனப்பான்மையை வளர்த்து விடுபவர்கள் நமது நாட்டில் மலிந்துவரும் இந்நாளில் வெளிநாடுகள் பலவற்றில் இலங்கையின் ராஜதூதராகப் பணியாற்றியவரும் கல்விஞானமுள்ளவரும் சிறந்த பௌத்தருமான டாக்டர் மலலசேகரா சில நல்ல யோசனைகளை வெளிவெளியாகத் தெரிவித்து வருவது பாராட்டவேண்டியது.

சிங்கள மொழியின் வளர்ச்சிக்கு தமிழ் மொழி பெரிதும் உதவியிருக்கிறதென்றும் தமிழ்மொழிக்கு சிங்களம் கடப்பாடுடையதென்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி இராப்போசன விருந்தில் பேசுகையில் குறிப்பிட்டவர், நூற்றாண்டுகளாக சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து ஒருவருடைய வாழ்க்கை முறையையும் மொழியையும் தமதாக்கிக்கொண்டனரென்றும் குறிப்பிட்டிருந்தார், அந்நிய ஆட்சிக்காலத்தில் வெள்ளைக்கார எஜமானனின் சாப்பாட்டு மேஜையிலிருந்து விழுந்த துண்டுகளை நாயும் பூனையும் போல் கடிபட்ட மனப்பான்மை, நாடு சுதந்திரம் பெற்றபின்னரும் நீடித்துவருகிறதென்றும் நமக்குள் சண்டை பிடிக்கும் இம்மனப்போக்கு நீக்கப்படவேண்டுமென்றும் டாக்டர் மலலசேகரா கூறியிருக்கிறார். இவை நாட்டு மக்களின் சிந்தனையைத் தூண்ட உதவ வேண்டும்.

நூற்றாண்டு காலமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த இரு பெரும் சமூகங்கள் இனியும் ஒற்றுமையுடன் வாழ முடியாதா? குறுகிய தேசியத்தை விடுத்து பரந்த மனப்பான்மையுடன் வழிகாட்டக்கூடிய தலைவர்கள்தான் இதற்குத் தேவை.

நாடு அரசியல் சுதந்திரம் பெற்று இருபது வருடங்களாகியும் நமது நாடு முன்னேற்றமடையாமலிருப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து தேசிய ஐக்கியத்தையும் நாட்டின் முன்னேற்றத்தையும் மட்டும் கருத்தில் கொண்டு புதிய வழி [illegible] முயற்சியில் புதிய தலைமையொன்று தோன்றி ஈடுபட வேண்டும். சிங்களம் மட்டும் சட்டம் வந்ததும் எதையும் சிங்களத்திலேயே செய்ய வேண்டும்; ஆங்கிலம் அந்நிய மொழி அது நமக்கு வேண்டாம் என்று கூறியவர்கூட இன்று ஆங்கிலத்தின் தரம் குறைந்துவிட்டதென்றும் அதன் தரத்தை உயர்த்த வேண்டுமென்றும் கூறத் தொடங்கியுள்ளனர். சிங்களத்திலும் தமிழிலும் தான் இவ்வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பாடங்கள் படிப்பிக்கப்படவிருக்கின்றன. ஆயினும் ஆங்கிலத்தை முற்றாகக் கைவிடுவதால் நமது மக்களுக்கும் நாட்டுக்கும்தான் தீமை என்பதை டாக்டர் மலலசேகரா எடுத்துக்காட்டியதனால் ஆங்கிலத்திலும் போதனை அளிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு அரசியல் தலைவர்களும் ஆதரவு கொடுத்துள்ளனர். எதிர்காலச் சந்ததியின் நலனைக் கருதி தீர்க்கதரிசனத்துடன் செயலாற்றுவதற்கு ஒரு சிலராவது இருந்தால் அமைதியையும் தேசிய ஐக்கியத்தையும் [illegible] நாட்ட முடியும் என்பது திண்ணம்.

# "தமிழ்மொழி மூலம் தமிழைவளர்க்க முடியாது"

## சா. கணேசன் கூறுகிறார்

— நமது நிருபர் ஜே. ஜெயக்குமார் —

உடுப்பிட்டி, வெள்ளி

தமிழைத் தமிழ்மொழி மூலம் வளர்க்கமுடியாது ஆங்கிலம்போன்ற பிற மொழிகளின் மூலமே தமிழை மேம்படுத்தலாம். தமிழாராய்ச்சி மகாநாட்டின் நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில் நடைபெற்றதாகக் குறைகூறுவது பிழையான அபிப்பிராயமாகும்.

இவ்வாறு இந்திய சுதந்திரக்கட்சித் தலைவரும், தமிழ் அறிஞருமான திரு. சா. கணேசன் நமது நிருபருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

திரு. கணேசன் மேலும் கூறியதாவது: "எனது இலட்சியம் அரசியலும், இலக்கியமுமே. நான் கம்பனுடைய நூலை ஆராய்ந்து அதற்றில் காணப்படும் அணி, மொழிநடை, சொல்லடை, காதல், வீரம் முதலியவற்றைத் தொகுத்து ஒரு பெரிய நூலாகத் தயாரித்துள்ளேன். பத்து வருடக் கடும் முயற்சியின் பின்னர்தான் இம் முயற்சி ஈடேறியுள்ளது. இக் கம்பன் நூல் ஆராய்ச்சித் தொகுப்பு பத்துப் பாகங்களாக வெளிவரும்.

தமிழகத்தில் உள்ள ஆலயங்கள் வடநாட்டு ஆராதனையைப் பின்பற்றவில்லை. தென்னாட்டின் ஆகம அடிப்படையில் வடநாட்டு முறைக்கு மாறான வேறு முறையில் ஆலய ஆராதனை நடைபெற்று வருகின்றது. வடநாட்டிலேயே மார்க்க முறையில் நடைபெறுகின்றது. சமஸ்கிருதம் ஒரு மொழியல்ல. அது ஓர் அங்கம். சமஸ்கிருதம் வடமொழியுமல்ல. சமஸ்கிருதம் கல்விமான்களுக்குரிய பொதுமொழி. இதற்கு வரம்பு போடப்படவில்லை.

தமிழகத்தில் பாடசாலைகளில் சமயக்கல்வி போதிக்க முயற்சி செய்யப்படவில்லை. சமயக்கல்வி இல்லாத கல்வியினால் பயன்பெறமுடியாது. இதனால் தமிழகத்தில் கல்வித்துறைக்குத் தீங்குநேரிட்டுள்ளது. நான் கல்லூரிகள் எதிலும் படிக்கவில்லை. எனது சுயமுயற்சியினாலேயே கல்வியும் ஆங்கில அறிவும் பெற்றேன். இப்பொழுது நான் தமிழகத்தில் ஏராளமான பாடசாலைகளையும், கல்லூரிகளையும் நடத்திவருகின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கு நல்ல பணி செய்த பலர் இலங்கையில் தோன்றியுள்ளனர், தமிழும், சைவமும் வளம் பெற அவர்கள் உழைத்தார்கள். ஆறுமுகநாவலர், விபுலாநந்தர் ஆகியோர் தமது நாட்டுக்கும், தமிழ்நாட்டுக்கும் செய்த பணிகள் அளப்பரியன. ஆறுமுகநாவலரை எனக்குத் தெரியாவிடினும் அவருடைய நூல்கள் மூலம் அவருடன் பழகினேன். விபுலாநந்த அடிகளார் எனது நண்பர். அவர் பல கஷ்டங்கட்கிடையே தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டுகளை இன்று தமிழுலகம் [illegible] இன்புறுகின்றது.

சிறு கிளைகளில் சமய உணர்ச்சியைப் புகுத்துவதின் மூலம் வாழ்க்கை இருப்திகரமாக அமை[illegible]. பணம் இருந்தாலும் [illegible]வில் நிம்மதி இருக்கவேண்டும். [illegible] வாழ்வு, விதி என்பனவற்றை நாம் உணரவேண்டும்.

## இன்றைய பலன்

(13-7-68)

ஆனி மீ 30 உ

சனிக்கிழமை

திதி- சதுர்த்தி

நட்சத்திரம்- அவிட்டம் பகல் 11-41 மேல் சதயம்.

ராகுகாலம் - 8-59 10-29.

எமநேரம் - 2-59— 4-29.

இன்று பிறந்தவர்களுக்கு — செல்வாக்குப் பெருகும். சிலர் வாழ்க்கையில் வெற்றிக் கொடி கட்டிப் பறக்கும். நெருங்கிய நண்பர் ஒருவருடன் மனஸ்தாபப்படநேரிடும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையே சிறந்தது. மாணவர்களுக்கு கல்வி நலன் உண்டு.

மேஷம்- சிந்தையில் [illegible], செயலிலே பதட்டம்

ரிஷபம்- அறிவுத்தாகம், ஆக்கப்பணி,

மிதுனம்- விருந்துவரும் வேடிக்கைகூட வரும்.

கடகம்- பற்றற்ற நிலை, பரம்பொருள் நினைப்பு.

சிம்மம்- இன்பத் துடிப்பு, இதயங்கள் இணையும்

கன்னி- கூரம்பாயினும் குறிதவறிவிடும்.

துலாம்- வியப்பூட்டும் செய்தி, வெளியீட்டுத் தொடர்பு.

விருச்சிகம்- விசித்திர எண்ணம், விளையாட்டுப் பிள்ளை.

தனுசு- கைநிறையப் பணம், காத்திருக்கும் உறவு

மகரம்- வேலையில் தடை, விரக்திநிலை,

கும்பம்- உறவில் முறிவு, ஊமைக் கண்ணீர்.

மீனம்- புதிய முயற்சி, பொதுசனத் தொடர்பு.

— சோதிடக் கலாநிதி —

[illegible]

## விஞ்ஞானக் கழகம்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி செங்குந்த இந்துக்கல்லூரியில் விஞ்ஞானக்கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இக்கூட்டத்துக்குக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பி. நடராஜா தலைமைவகித்தார்.

நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: போஷகர்: திரு. எஸ். பி. நடராஜா, உப போஷகர்கள்: செல்வி கீ. சினிவாசகம் பி. எஸ்ஸி., திருமதி ரி. நவரத்தினம் பி. ஏ., பொறுப்பாசிரியர்; திரு. எஸ். கந்தசாமி பி. எஸ்ஸி., தலைவர்: செல்வன் எஸ். சண்முகதாஸ், உப தலைவர்கள்: செல்வன் இரா. ஸ்ரீதரன் செல்வி தி. ரூபராணி, செயலாளர்: எஸ். இராஜகோபாலன், உப செயலாளர்: செல்வி இ. பரிமளதேவி, பொருளாளர்: ஆர். தவகோபால்.

இக்கூட்டத்தில் பண்டிதர் எஸ். இராமச்சந்திரன் 'அணுசக்தி' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். [கா. நி]

## பீடித் தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமொன்று நிறுவப்பட்டுள்ளது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: ஜனாப் ஏ. எல். லாஹிர், உப தலைவர் ஜனாப் எஸ். எம். ஜுனூன், காரியதரிசி ஜனாப் எம். எம். இபுறுகீம் தையிப், உப காரியதரிசி ஜனாப் பி. எச். எ. யூசுப், தனாதிகாரி ஜனாப் பி. எம். மீரா சாகிபு, உபதனாதிகாரி ஜனாப் ஏ. பௌபீக்.

கூட்டுறவுப் பரிசோதகர்களான திரு. பி. கோவிந்தசாமி, திரு. ஜே. எம். எஸ். தெவின்ஸ் ஆகியோர் பீடித்தொழிற்சாலையைப் பார்வையிட்டு கூட்டுறவின் நன்மை பற்றி விளக்கிக்கூறினர்கள்.

## தேர்தல்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், இரத்தினபுரி, அநுராதபுரம், கண்டி, களுத்துறை ஆகிய இடங்களிலிருக்கும் 19 கிராமசபைகளினதும், 1 பட்டின சபையினதும் தேர்தல்களை தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம். ஒத்திவைத்துள்ளதாக, வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

புறப்படுவதற்கு முதல் நாள் மாலை ஈழத்தின் மூன்று சிவன்கோவில்களில் மகரிஷி சுந்தரானந்தர் தரிசனம் செய்து விட்டுப் பிரசங்கம் செய்தார்கள். வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் சுவாமி அவர்கள் தரிசனம் செய்துவருகையில், நடராஜ சன்னிதியிலே ஒரு சின்ன நிகழ்ச்சி. சுமார் 3 வயதுள்ள ஒரு சின்னக்குழந்தை, "சுவாமி! விழுந்து கும்பிடுவதோ சுவாமி!" என்று மழலையுடன் கேட்டதும் வியப்பாயிருந்தது. சற்றும் தயங்காமல் 70 வயதுக்கு மேலான சுவாமியும், குழந்தை கூறியபடியே கீழே விழுந்து கும்பிட்டெழுந்தார்கள்!

வல்வெட்டித்துறையிலே சுவாமிக்கு அமோகமான வரவேற்பு. அங்கு சிவன் கோவிலடியில் பெருங்கூட்டம். அங்கு கோவிலையும் மக்களின் பக்தியையும் சுவாமி அவர்கள் பெரிதும் பாராட்டி, 'அப்பரும் அப்பூதி அடிகளும்' என்பது பற்றி உணர்ச்சியுடன் சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார்.

பின்னர் பருத்தித்துறை சிவன் கோவிலில் பேச்சு. இரவு 11 மணிக்கு மேலாகியும் மக்கள் அங்கு ஏராளமாகக் காத்திருந்து அமைதியாகக் கேட்டனர். கடைசியில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக சுவாமியின் கருத்தைக் கேட்டதற்கு, நல்ல ஆசாரத்துடன் சிவநாமம் செய்துகொண்டு அவர்கள் வருவதாயின் அவர்களைவிட வேண்டியதென்பதே தமது கருத்தென்றும், சாதி காரணமாக ஒதுக்கினால் சைவ சமூகம் மிகப் பலவீனமடையுமென்றும் எச்சரித்தார். இதைக்கேட்ட ஒரு ஹரிஜனர், "சுவாமி சொல்லிவிட்டார்கள். ஆனால் இவர்கள் விடுவார்களா!" என்று கூறியது உள்ளத்தைத் தொட்டது. சைவ சமூகமே! உன் உள்ளம் சிறிது இளகாதா?

ஃ ஃ ஃ

ஒரு சின்னக் குழந்தை அழுதுகொண்டே வந்தது. இரண்டுநாட்களுக்கு முன் விளையாடுகையில் ஒரு புளியங்கொட்டை அதன் மூக்குக்குள் சென்று சிக்கிவிட்டதாம். தாயார் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு பெரிய ஆஸ்பத்திரிக்குச் செல்லவே, குழந்தையை 'வார்டு' [ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை] செய்ய வேண்டுமென்று கூறினராம். தாயார் தயங்கிக்கொண்டே வந்து ஒருவரிடம் சொல்லவே, அவர் பக்கத்தில் ஒரு டாக்டரிடம் கொண்டு சென்றார். முதலில் மூக்கில் ஒரு மருந்து தடவிவிட்டு, 10 நிமிஷத்துக்குப்பின் புளியங்கொட்டையை மெதுவாக எடுத்துவிட்டாராம் அந்த டாக்டர் அழுத குழந்தையும் சிரித்துக்கொண்டு சென்றது.

ஃ ஃ ஃ

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் ஏற மகாதேவ ஆசிரம அதிபர் பெரியார் வடிவேல் சுவாமி அவர்கள், பஸ் ஸ்டாண்டுக்கு ஒரு நாள் காலை 6 மணிக்கு வந்தாராம். 9 மணிக்கே பஸ் வந்தது. அதில் ஏற சுவாமி அவர்கள் முற்பட்டபோது, பஸ் கண்டக்டர் சுவாமி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவின் எல்லைகளை மாற்றி அமைக்க யாரும் முற்பட்டால்....

## மூன்றாவது உலகப் போர் என்கிறார் ரஷ்யப் பிரதமர்

ஸ்டொக்ஹோம், ஜூலை 12

தற்போது சுவீடனுக்கு விஜயஞ்செய்துள்ள ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின், மூன்றாவது உலகப்போர் பற்றிய ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளார். அவருக்கு அளிக்கப்பட்ட இரவு போசன விருந்தொன்றின் போதே இவர் இவ்வாறு கூறினார்.

இரண்டாவது உலகப் போருக்குப்பின் நிலவிய எல்லைகளை முக்கியமாக ஜெர்மனியில் சில சக்திகள் மாற்றியமைக்க முயல்வதாக அவர் குற்றஞ் சாட்டினார்.

'போருக்குப் பிந்திய எல்லைகளில் மாற்றம் கோருபவர்கள், ஒரு மூன்றாவது உலகப் போரையே கோருகிறார்கள்' என்று திரு. கொஸிஜின் குறிப்பிட்டார்.

சுவீடனிலிருந்து இன்று மாஸ்கோவுக்கு அவர் புறப்படமுன்னர், அவர் மேற்கு ஆசிய விசேஷ ஐ. நா. பிரதிநிதியான டாக்டர் குன்னர் ஜாரிங்கைச் சந்தித்து மேற்கு ஆசியா குறித்துப் பேசுவார்.

மேற்கு ஆசியாபற்றித் திரு. கொஸிஜின் தமது நேற்றைய இராப்போசன விருந்தின்போது குறிப்பிடுகையில், கைப்பற்றிய அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் திரும்பிச் செல்லாதவரை, மேற்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்ட முடியாது என்று கூறினார்.

# பிரதமருக்கு மகஜர்

நெடுந்தீவு, வெள்ளி

''இலங்கையின் தங்கள் ஆட்சியில் விவசாயம் முன்னேறிவரும் இவ்வேளையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உழவர்களால் கொண்டாடப்பட்டு வரும் தைப்பொங்கல் தினத்தை விவசாயிகள் தேசிய தினமாகப் பிரகடனப்படுத்துக''

நெடுந்தீவு சமூக முன்னேற்றச் சங்கம் பிரதம மந்திரிக்கும் உள்நாட்டு அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

## 'தொழிலைப் பெருக்க விஞ்ஞானம் பயிலுங்கள்'

உடுப்பிட்டி, வெள்ளி

'உத்தியோகத்திற்காக மட்டும் விஞ்ஞானக் கல்வியைப் பயிலக்கூடாது. இப்பொழுது தொழில் வளம் பெருகவும், விவசாயம் மேலோங்கவும் விஞ்ஞானம் பெருதவி புரிகின்றது. எனவே எல்லோரும் விஞ்ஞான அறிவுபெறவேண்டும்'

இவ்வாறு வடபகுதி விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு மு. அற்புதநாதன் புலோலி மேற்கு தமிழ் சைவ ஆண்கள் பாடசாலையின் பெற்றோர்தின விழா, வருடாந்த பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

தலைமையாசிரியர் திரு. மா. சுப்பிரமணியம் தனது ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார். பண்டிதர் பொன்னையா, ஆசிரியர் திரு. சபாபதிப்பிள்ளை, திரு. நடேசன் உட்பட வேறு பலரும் பேசினர்.

திருமதி அற்புதநாதன் பரிசில்களை வழங்கினர்.

## நியமனம்

உடுப்பிட்டி, வெள்ளி

மண்டான் உபதபாற்கந்தோர் அதிபராகத் திரு. சரவணமுத்து சுப்பிரமணியம் இம்மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னர் கரணவாய், வதிரி உபதபாற்கந்தோர்களில் பதில் அதிபராகக் கடமையாற்றிவந்தார்.

# கிரீசுக்குப் புதிய அரசியற் சாஸனம்

## ரோமிலுள்ள மன்னருக்கு நகல் அனுப்பப்பட்டது

ரோம், ஜூலை 12

கிரேக்க நாட்டுக்கான ஒரு புதிய அரசியற் சாஸனத்தின் நகல், தற்போது ரோமில் தங்கியுள்ள கிரேக்க மன்னர் கொன்ஸ்டன்டைனுக்குக் கிரேக்க அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது கிரேக்க நாட்டின் ஆட்சியாளராகப் பதவியிலிருப்பவர்களுடன் ஏற்பட்ட அரசியற் தகராறு காரணமாக மன்னர் கொன்ஸ்டன்டைன், கடந்த வருடத் தொடக்கம் ரோமிலேயே வசித்து வருகிறார் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

மன்னர் கொன்ஸ்டன்டைனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள புதிய அரசியற் சாஸனத்தின்படி, மன்னரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. அவர் வெறும் அதிகாரச் சின்னமாகவே விளங்குவார். பார்லிமென்டைக் கலைக்கும் அதிகாரம் அவருக்கு இருக்காது. பார்லிமென்டிலுள்ள பிரதிநிதிகள் தொகையும் 300லிருந்து 150க்குக் குறைக்கப்படும். இப்புதிய அரசியற்சாஸனம், மக்களின் வாக்கெடுப்புக்கு அடுத்த செப்டம்பர் மாதம் விடப்படும். மக்களின் அங்கீகாரம் கிடைத்ததும் அது சட்டமாகும்.

## ''மாணவர் சுயமாக சிந்திக்கவேண்டும்''

உடுப்பிட்டி, வெள்ளி

''மாணவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும் பிறரின் ஆலோசனைகளைக்கேட்டு நடக்கவேண்டியதோடு இதற்கும் பிறரின் ஆலோசனைகளை எதிர் பார்த்திருக்கக் கூடாது'' என்று வடபகுதி கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சின்னத்தம்பி தலைமைவகித்தார்.

## ''பத்திரிகைகளில் இடம்பெற்றால் மட்டும் எழுத்தாளனா?''

நாவலப்பிட்டி, வெள்ளி

'எழுத்தாளனின் படைப்புக்கள் பத்திரிகையில் இடம் பெற்றாலேயேட்டுமே அவன் ஒரு எழுத்தாளன் என்றதவறான கருத்து நிலவுகிறது. ஆத்ம திருத்திக்காக எழுதி பிரசுரமாகாவிடினும் அவை சிறந்தவைடைப்புஎன காணும்போது அவற்றை மதிக்க வேண்டும்.'

இவ்வாறு நாவலப்பிட்டி இளம் எழுத்தாளர் சங்க கருத்தரங்கில் பேசும்போது திரு. இர. சந்திரசேகரன் கூறினர்

வட்டார பாடசாலைகளுக்கிடையில் கதை, கட்டுரைப்போட்டிகள் நடாத்தவும், வருகிமுடிவில் இப்பகுதி எழுத்தாளர்களின் படைப்புக்களைகொண்ட நூல் ஒன்றை வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. வெ. ராமானுஜம், திரு. சதாசிவம் ஐனுப். ப. ஆப்டீன், திரு. சு. பிரேமசம்பு, திரு. எஸ். சந்தனபிச்சை ஆகியோரும் தமது கருத்துக்களை வழங்கினர்.

## மூன்று எதிரிகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு

### ஓர் எதிரிவிடுதலை

வல்வெட்டித்துறை, வெள்ளி

கரவெட்டியைச் சேர்ந்த சி. தியாகு, தா. விஜுசி, வி. ஐயம்பிள்ளை, சி. பிச்சையப்பன் ஆகிய நால்வரும் அதே இடத்தைச் சேர்ந்த முருகன் சிற்றம்பலத்திற்கு கடந்த ஜனவரி மாதம் 16-ந் திகதி சதியாலோசனை செய்து கைக்குண்டு வீசிகாயம் உண்டுபண்ணியதாக பருத்தித்துறை பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் நாலாம் எதிரியை விடுதலைசெய்து மற்ற மூன்று எதிரிகளையும் சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு பாரப்படுத்தியுள்ளார்.

# ஐரோப்பா, பாகிஸ்தான் சீறுவில் புயலும் வெள்ளமும்

## 12 பேர் மரணம்; பலர் வீடிழந்தனர்

லண்டன், ஜூலை 12

ஐரோப்பாவிலும், பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் நேற்றுப் பெய்த கடும் மழை, வீசிய புயல் இவற்றின் விளைவாக 12 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இங்கிலாந்தில் ஆறுபேர் உயிரிழந்தனர். அங்கு சில பகுதிகளில் மணிக்கு 115 மைல் வேகத்தில் காற்று வீசியது.

பிரான்ஸில், வெள்ளத்தினால் பல லட்சக்கணக்கான பிராங்குக்கு நஷ்டமேற்பட்டுள்ளது.

மேற்கு ஜெர்மனியில், இரண்டு இடங்களில், கடும் வெள்ளத்தைத் தொடர்ந்து, அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மக்கள் வீடிழந்தனர்.

மேற்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளத்தில் 30 பேர் இறந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்துள்ளனர்.

சீறுவில் தொடர்ந்து பெய்த கடும் மழையைத் தொடர்ந்து பல இடங்களிலும் போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மே. ஆசியாவில்

# பலாத்காரப்பிரயோகத்துக்கான நிர்ப்பந்தம் ஏற்படலாம்

## டிட்டோவிடம் நாஸர்

பெல்கிரேட், ஜூலை 12

யூகோஸ்லாவியா வந்துள்ள ஐக்கிய அரபுக்குடியரசு ஜனாதிபதி திரு நாஸர், யூகோஸ்லாவிய ஜனாதிபதி திரு. டிட்டோவுடன், தமது முதலாவது சுற்றுப்பேச்சுக்களை, நேற்று பிரியோனியில் நடத்தினர்.

மேற்கு ஆசியாவில் அரசியல் தீர்வு ஒன்று ஏற்படத் தவறினால், பலாத்காரம் மூலம் தீர்வுகாண வேண்டிய நிர்ப்பந்தம் ஐ. அ. கு. வுக்கு ஏற்படலாமென நாஸர், டிட்டோவிடம் தெரிவித்துள்ளதாகக்கூறப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை எடுக்கும் அரபு மக்களின் உரிமையை யாரும் தடைசெய்ய முடியாதெனினும், அத்தகைய நடவடிக்கையில் ஆபத்து இருக்கலாமென டிட்டோ நாஸரிடம் புத்திமதி கூறியதாகவும் தெரிகிறது.

## துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொலை

### சுட்டவன் தப்பினான்

வாஷிங்டன், ஜூலை 12

அமெரிக்காவில், நேற்று ஒரு நகரில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில், 3 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் நான்கு பேருக்குக் காயமேற்பட்டது.

துப்பாக்கியைக் கையில் தாங்கிய மனிதன் ஒருவன், தனது இருப்பிடத்திலிருந்து சுட்டபோதே, மூவரும் கொல்லப்பட்டனர்.

அவனுடைய இருப்பிடத்தைச் சுற்றிப் பொலிஸார் பலத்த காவல் போட்டனர். அப்படியிருந்தும், அவன் எவ்விதமோ தப்பி விட்டான். அவனைத் தேடுவதில் பொலிஸார் தீவிர முயற்சி எடுத்து வருகிறார்கள்.

வார்ஸோ

## துருப்புக்கள் திரும்புகின்றன

பிராக், ஜூலை 12

அண்மையில் கிழக்கு ஐரோப்பாவில் போர் பயிற்சிகளில் ஈடுபட்ட வார்ஸோ ஒப்பந்த நாடுகள், தத்தம் இடங்களுக்கு இப்போது தமது துருப்புக்களைத் திருப்பிப் பெற்றுக்கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

செக்கோஸ்லவாக்கியாவில், மற்றைய வார்ஸோ ஒப்பந்த நாட்டுத் துருப்புக்கள் அனைத்தும் திரும்பிச் சென்ற பின்பும், ரஷ்ய துருப்புகள் தொடர்ந்து இருந்ததனால், செக். மக்களும், அரசாங்கமும் அதிருப்தி கொண்டிருந்தனர்.

இப்போது, சோவியத் துருப்புகள் செக்கோஸ்லாவாக்கியாவை விட்டு நாளை தொடக்கம் திரும்பிச்செல்

# நைஜீரியாவுக்குச் சென்றுள்ள பிரிட்டிஷ் தூதுகோஷ்டி

## நிவாரண வேலைகள் தடை

லாகோஸ், ஜூலை 12

நைஜீரியாவுக்குச் சென்றுள்ள பிரிட்டிஷ் தூதுகோஷ்டி அங்கு நடைபெறும் உள்நாட்டுப்போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு நிவாரணம் அளிக்க முடியாமல் தடைசெய்யப்பட்டுள்ளது. இதற்குக்காரணம், சமஷ்டி நைஜீரியத் துருப்புக்களுக்கு எதிராகப் பிரிவினை 'பியாவ்ரா'த் துருப்புகள் எதிர்த் தாக்குதல் ஆரம்பித்துள்ள தேயாகும்.

ஏறத்தாழ 200,000 மக்கள் உள்நாட்டுப் போரின் விளைவால் பட்டினி கிடந்து [illegible]

[illegible] செக். பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

மோசமான இடங்களை அடைவதில் பிரிட்டிஷ்தூதுகோஷ்டிக்குத் தடையேற்பட்டுள்ளது.

தூதுகோஷ்டியின் தலைவர் ஹன்ற் பிரபுவை நிவாரண மளிக்கும் பகுதிகளுக்கு முன்னேறிச் செல்ல வேண்டாமென்று சமஷ்டி அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பிரிட்டிஷ் தூதுகோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் நிவாரண வேலைகள் இப்போது கஷ்டமானதுமட்டுமன்றி ஆபத்தானதுமாக விருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

### ஜோன்ஸன் உறுதி

பட்டினியால் அவலற்படும் நைஜீரிய அகதிகளுக்கு நிவாரணமளிக்க வசதிகள் செய்யப்பட வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனும் வற்புறுத்தியுள்ளார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் தமது நாடு சகல உதவிகளும் அளிக்குமென்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

### ஆறம்சத் திட்டம்

இதற்கிடையில், நைஜீரிய உள்நாட்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் பிரிவினை பியாவ்ரா, 6 அம்சத் திட்டமொன்றை சமர்ப்பித்துள்ளது.

சமஷ்டி நைஜீரியா, போர் நிறுத்தமொன்றை உடன் அமுல் நடத்த வேண்டுமென்றும், சமஷ்டி நைஜீரியாவுக்கு ஆயுத உதவி அளிப்பதை பிரிட்டன் நிறுத்த வேண்டுமென்றும் பியாவ்ரா அந்த ஆறம்சத் திட்டத்தில் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பட்டதாரிகளுக்கு உதவி ஆசிரியர் பதவி

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கொழும்பு, வெள்ளி அரசினர் மத்திய மகா வித்திய லயங்களிலும், மகா வித்தியாலயங்களிலு முள்ள உதவி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்மொழிமூலம் பட்டதாரிகளுக்கான காலியிடங்கள் பின்வரும் மாவட்டங்களிலுள்ள மத்திய மகா வித்தியாலயங்களிலும், மகா வித்தியாலயங்களிலும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டம்; மாத்தறை மாவட்டம், காலி மாவட்டம், இரத்தினபுரி மாவட்டம், கேகாலை மாவட்டம், நுவரெலியா மாவட்டம், மாத்தளை மாவட்டம். மொனராகலை மாவட்டம், பதுளை மாவட்டம், குருநாகலை மாவட்டம், புத்தளம் மாவட்டம், அக்கரைப்பற்று மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம். திருகோணமலை மாவட்டம்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய முடிவு திகதி இம்மாதம் 26 என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்கள் 5-7-68 இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணம்

# மின்சார நிலையகாணி சுவீகரிப்புக்கு ஆட்சேபம்

## முன்னாள் மாநகரசபை உறுப்பினர் சுகாதார அமைச்சுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், சனி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் நிலையம் கட்டுவதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான மின்சார நிலையமிருக்கும் காணி சுவீகரிக்கப்படுவதை ஆட்சேபித்து மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்களில் ஆறுபேர் சுகாதார அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசிக்கு மகஜரொன்றை அனுப்பியுள்ளனர்.

முன்னாள் மாநகரசபை உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ் நாகராஜா, எஸ். சி. மகாதேவா, எஸ். அந்தோனிப்பிள்ளை, பி. எப். சேவியர், ஜே. எஸ். அழகைா, எஸ். ரி. செல்லத்துரை ஆகியோர் இம்மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

அந்த மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது: யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்காக முன்னொருதடவை மணிக்கூட்டு வீதியின் ஒருபகுதி தடைசெய்யப்பட்டதால், பல தொல்லைகள் ஏற்பட்டன. இதன் காரணமாகவே ஆஸ்பத்திரிக்கு அருகில் புதிய வீதியொன்று திறக்கப்பட்டது. மீண்டும் ஆஸ்பத்திரி விஸ்தரிப்பதற்காக இவ்வீதியையும், மின்நிலையக் காணியை சுவீகரிக்க முடிவுசெய்யப்பட்டிருப்பது வருந்தக்கூடியதும், ஆச்சரியப்படக் கூடியதுமாகும்.

நகரத்தின் ஒருபகுதிக்கும் மற்றப்பகுதிக்கும் இவ்வீதி தான் ஓரே தொடர்பாக அமைந்திருக்கிறது. தற்பொழுது நகரின் போக்குவரத்து திட்டத்திற்கு முக்கிய வீதியாக இது அமைந்துள்ளது. இவ்வீதியைச் சுவீகரிப்பதால், மக்கள் பல தொல்லைகளுக்கு உள்ளாக நேரிடும். ஆதலால் இவ்வீதியையும் காணியையும் சுவீகரிக்க எடுக்கும் முயற்சியை தொடரவேண்டாம்.

வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை ஆஸ்பத்திரி வளவிற்குள்ளேயே கட்ட இடவசதியுண்டு. ஆஸ்பத்திரி வளவிற்கு வடகிழக்கு மூலையில் 'விக்ரோறியா வீதி-பருத்தித்துறை வீதி மூலை] வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை கட்டலாமென்பதே எமதுகருத்து [ந. நி.

# வீடமைப்புமந்திரி 14ல் யாழ்ப்பாணம் வருகிறார்


யாழ்ப்பாணம், சனி வீடமைப்புடி அமைச்சர் திரு. எம். எச் ஜெயவர்த்தனா இம்மாதம் 14ந் தேதி முதல் 3 நாட்கள் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

14ந் தேதி காலை விமானம் மூலம் பலாலியை வந்தடையும் அமைச்சர், அன்று வைத்தடி வீட்டுத்திட்டத்திற்கான இடத்தைச் சென்று பார்வையிடுவார். 15ந் தேதி குருநகர், கரையூர், பாஷையூர் வீட்டுத்திட்டங்களையும் பார்வையிடுவதோடு, அரசாங்கச் செயலகத்தில் நடைபெறும் மாநாடொன்றிலும் கலந்துகொண்டபின்னர் 16ந் தேதி கொழும்பு திரும்புவார்.

[ஈ. நி]

# புதிய அதிபர்

அனலைதீவு, வெள்ளி அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய புதிய அதிபராக யாழ்ப்பாணம் கனகரெத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் திரு இராசையா நியமனம் பெற்றுள்ளார். அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய சங்கீத ஆசிரியர் திரு. சுணபதிப்பிள்ளை காரைநகருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.




இதோ அதன் ஈடிணையற்ற சிறப்பம்சங்கள்! இந்த உன்னத அம்சங்களை ஒப்பிட்டுப் பார்த்து, இன்றே எஸ்-லோனை உங்கள் உபயோகத்துக்குத் தேர்ந்தெடுங்கள்!

1. சிதைவடையாதது 2. இறுக்க் கனமுடையது

3. நொடியில் பொருத்தக்கூடியது

நீடித்துழைக்கவென்றே தயாரானது இந்தக் குழாய். கிரமமாக மாற்ற வேண்டியதில்லை. உலோகக் குழாயை விட இந்தில் ஒரு பங்கு கனமுள்ளதாகையால் இறுக்க் கனமுடையதெனப் புகழ் பெறுவது எஸ்-லோன். அதன் இடப் பரிமாற்றச் செலவு மிகச் சொற்பம். விரைவாயும் இலகுவாயும் இதைப் பொருத்தலாம். பெரிய வேலைக் குழுக்கள் தேவையேயில்லை.

4. எஃகின் உறுதியுடையது

5. அரிப்புக்குள்ளாகாதது 6. நஞ்சேறாதது

அழுக்கம் இந்தக் குழாயை அசைக்கவே முடியாது. எவ்வளவு கடும் உழைப்புக்கும் இது ஈடு கொடுத்து நிற்கும். இதிற் கறள் பிடியாது. இதைத் துப்புரவு செய்ய வேண்டியதில்லை. அரிப்பூட்டும் ரசாயன மருந்துகள் இதைப் பாதிக்க மாட்டா. எஸ்-லோன் குழாய்களில் பாயும் தண்ணீரில் ஒருபோதும் நஞ்சேறாது.

7. கால நிலைப் பாதிப்பற்றது

8. மின் அதிர்ச்சிப் பாதிப்பற்றது

இது, கடும் வெய்யில், மழை, பருவக் காற்றுத்தாக்குதலை எதிர்த்து நிற்பது. எஸ்-லோனின் விசேஷ மின் காப்புப் பண்பு காரணமாக மின்கம்பிக் காப்பு வேலைகளுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற குழாய் இது.

9. சிக்கனமானது 10. துணை உறுப்புகள் கொண்டது

பிற தேவைகளுக்குப் பணத்தை மீதப்படுத்தித்தரும் நீண்ட காலப் பெறுமதியை வழங்குகிறது இது. எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் 300-க்கு மேற்பட்ட விரிந்தளவான துணை உறுப்புகள் கொண்டது.

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த
இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும்
சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிடெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தருபவருக்கு சன்மானம்



இப்படத்தில் காணப்படும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சுந்தரம் செல்வரத்தினம் (வயது 25) வேலைத்தலத்திலிருந்து ரொக்கப் பணத்துடன் சென்றவரைக் காணவில்லை. உயரம் சுமார் 5 அடி 3 அங்குலம். பொது நிறம். முடி கட்டையாக வெட்டப்பட்டுள்ளது.

மேற்படி நபரின் இருப்பிடத்தைப் பற்றிய தகவல் தருபவருக்கு தரமான வெகுமதி அளிக்கப்படும்.

தகவல் அறிவிக்க வேண்டிய விலாசம்: 249, ஒல்கட் வீதி, கொழும்பு-11 அல்லது யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையம். 879

## யாழ்ப்பாண மாநகரசபை

### ஏல விற்பனையாளர் பற்றிய நிரல்

8-4-68-ம் திகதிய எனது முன்னைய அறிவித்தலின் தொடர்பாக, பின்வருவோரும் ஏலவிற்பனையாளராக 1968-ம் ஆண்டிற்கு பதிவு செய்துள்ளார்கள்.

| ஏலவிற்பனையாளர் பெயர் | முகவரி |
|---|---|
| 1. கே. செல்வத்துரை | "முருகன் இல்லம்" இணுவில். |
| 2. எஸ். சங்கரப்பிள்ளை. | தெல்லிப்பழை. |
| 3. என். அந்தோனிப்பிள்ளை. | இல. 22, கோவில் வீதி. யாழ்ப்பாணம். |

வே. தங்கவேலு,
பதில் மாநகரசபை ஆணையாளர்,
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 5-7-68. 878


**வின்ஸர்**
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நடித்த
**ராஜாவீட்டுப் பிள்ளை**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
**பணமா பாசமா**

**5-வது வெற்றி வாரம்!**
கிங்ஸ்லி
[கொழும்பு]
2.00 மாலை 6.00, 9.30.
இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற சிறந்தபடம்.
காதல் மன்னன்
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
நடித்த
ஏ. வி. எம்.
புரொடக்ஷன்ஸ் **ராமு**

**இப்பொழுது திரையிடப்படுகிறது!**
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
ஜேம்ஸ் போண்ட்
★ ஜெய்சங்கர்
★ எல் விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
**வல்லவன் ஒருவன்**


## அச்சுவேலி இராமசபை

### சோலைவரி அறிவித்தல்

அச்சுவேலிக் கிராமசபைக்கு சோலைவரி நிலுவைப் பணம் இதுவரை செலுத்தாமல் இருப்பவர்கள், உடனடியாக கிராமசபையில் குறிப்பிட்ட நிலுவைப்பணம் முழுவதையும் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த அறிவித்தலுக்கிணங்கி நடக்கத் தவறுவோரின் வரி நிலுவைக்குப் பெறுமதியான அசைவுள்ள அல்லது அசைவற்ற பொருட்கள் கிராம சபைச் சட்டத்தின் 257-ம் அதிகாரம் பகுதி 40 "டி" யின் தாற்பரியப்படி நடுக்கட்டல் செய்யப்பட்டு பொருட்கள் பறிமுதலாக்கப்படும் அல்லது அசைவற்ற ஆதனம் ஏலத்தில் விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பு: சோலைவரி நிலுவை விபரத்தை சந்தோரிடம் வந்து அறிந்து செலுத்தவேண்டும்.

சி. த. சபாரத்தினம்,
தலைவர், கிராமசபை,
அச்சுவேலி.

கிராமசபைக் கந்தோர்,
அச்சுவேலி,
7-7-68. 876

**அரசாங்க கேள்விகள்**
**பொதுவேலைப் பகுதி**

என் 1874 - யாழ்ப்பாண மாவட்ட வேலைக்களத்திற்கு அலுவலகமும், களஞ்சிய அறைகளும் அமைத்தல். கேள்விகள் முடிவு திகதி 7-8-68.

இதன் முழு விபரங்களுக்கும் 12-7-68 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1ம் பகுதி 11-ம் தொகுதியைப் பார்க்கவும்.
GP 6493

## தமிழ் நாடகக் குழு இலங்கை கலைக் கழகம்

### நாடக எழுத்துப் போட்டி - 1968

[அ] ஓரங்க நாடக எழுத்துப் போட்டி.
[ஆ] பொது நாடக எழுத்துப் போட்டி.

முடிவுத் திகதி 16-9-68

விபரங்களுக்கு:-
தலைவர்
தமிழ் நாடகக் குழு
இலங்கைக் கலைக் கழகம்,
135, தர்மபால மாவத்தை
கொழும்பு - 7.
என்ற முகவரிக்கு எழுதவும்.
861

**WANTED**

**MASTER WEAVER**

With experience in Design Work & Maintenance of Machinery. Salary according to qualification & experience.

Apply before 30th July, 1968, with full particulars under Registered Cover marked "Master Weaver" on top left hand corner of the envelope, to the President, Vali West M.P.C.S. Union Limited, Chankanai.

K. Kengatherampillai,
President.
Vali West M P C S.
Union Limited,
877 Chankanai.


மானிப்பாய்
**வெஸ்லி**
தினசரி 6-30, 9-30க்கும்
விடுமுறை தினங்களில் 2-30
சிவாஜி கணேசன்
தேவிகா
ராஜேந்திரன்
விஜயகுமாரி
நடித்த
**பச்சை விளக்கு**


நல்லூர் — கொழும்புத்துறை

## ஆசிரிய கலாசாலை மெய்வல்லுனர்போட்டிமுடிவுகள்

நல்லூர், வெள்ளி

நல்லூர் - கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலையின் மெய்வல்லுனர் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்வருமாறு:

குண்டு எறிதல்: செ. அ. வரதராசா (ந), சி. கந்தசாமி (ந), சி. கிருஷ்ணமூர்த்தி (கொ).

உயரம் பாய்தல்: பொ. சபாபதி (ந), பொ. சற்குணநாதன் (கொ), சே. துரைசாமி (ந).

தட்டெறிதல்: செ. அ. வரதராசா (ந), வே. சுந்தரலிங்கம் (ந), செ. யோ. ஜோசேப்பு (ந).

4x100 அஞ்சல் ஓட்டம்: நல்லூர், கொழும்புத்துறை, கொழும்புத்துறை.

4x440 அஞ்சல் ஓட்டம்: கொழும்புத்துறை, நல்லூர், கொழும்புத்துறை.

தாம்பு இழுவைப் போட்டி: நல்லூர், கொழும்புத்துறை.

100 மீட்டர் ஓட்டம்: பொ. சபாபதி (ந), பா. பிரான்சிஸ் சேவியர் (கொ), சி. கணபதிப்பிள்ளை (ந).

200 மீட்டர் ஓட்டம்: இ. சின்னப்பா (ந), வெ. சண்முகம் (கொ), சி. கணபதிப்பிள்ளை (ந).

400 மீட்டர் ஓட்டம்: இ. சின்னப்பா [ந], செ. ம. வெஸ்லி [கொ], வெ. சண்முகம் [கொ]

800 மீட்டர் ஓட்டம்: சு. இம்மனுவேல் (கொ), சி. சிவசுப்பிரமணியம் [ந], பொ. வீரசிங்கம் [ந].

1500 மீட்டர் ஓட்டம்: சு. இம்மனுவேல் (கொ), சி. வையாபுரிநாதன் [ந], சி. சிவசுப்பிரமணியம். (ந)

தத்தி மிதித்துப் பாய்தல்: சு. இம்மனுவேல் (கொ), சோ. துரைச்சாமி [ந], செ. துரைராசா [ந].

நீளம் பாய்தல்: பொ. சபாபதி [ந], பா. பிரான்சிஸ் சேவியர் (கொ), இ. சின்னப்பா (ந).

சிறந்த சாதனை வீரன்: பொ. சபாபதி [ந], சிறந்த வெற்றி வீரர்கள்: பொ. சபாபதி [ந], சு. இம்மனுவேல் (கொ).

இப்போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று நல்லூர் அரசினர் ஆசிரிய கலாசாலை முதலிடத்தை வகித்தது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் கலந்துகொண்டார். திருமதி தணிகாசலம் பரிசில்களை வழங்கினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 13—7—68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் அல் 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-30 பண்ணிசைத்தமிழ், 8-00 குர்ஆன், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை

344 மீற்றர் அல் 61 மீற்றர்
மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 பாவளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 சித்திரம்.


**MANOHARA**
JAFFNA
Daily at 6-30, 10-00 p.m.
Shammi Kapoor
in
**Jabse Tumhen Dekha Hai**

**RAJAH** JAFFNA
Daily at
4-45, 7 00 & 9-45 p.m.
**COUNTRY GIRL**
(Adults only)

**REGAL** JAFFNA
Daily at
4 0 7-00 & 9-45 P M.
David Knight
Moira Redmond
in
**Night Mare**
[Adults only]


## வலைப்பந்தாட்ட போட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம் சனி

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்கல்லூரி விளையாட்டு முன்றலில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் கீழ்ப்பிரிவு மாணவிகள், யாழ். இந்து மகளிர் கல்லூரியை 13—0 கோல்களாலும், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை 8—7 கோல்களாலும், சாவகச்சேரி றிபேக் கல்லூரியை 9—3 கோல்களாலும் வென்றுள்ளனர்.

**வரி விளம்பரம்**

11-7 1968 காலை யாழ்ப்பாணம் மெர்க்கன்டைல் வங்கியில் ஒரு பொருளைக் கைமாற்றுகக் கொடுத்தவர் கீழ்க்கண்ட விலாசத்தில் அதைப் பெற்றுக்கொள்ளவும். J. X. Carwalho, லங்கா பெற்றோல் நிலையம். 99, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1230

**காணவில்லை**

நூல் கயிற்றில் கோர்த்த 15 சாவிகள் வரை திருநெல்வேலி பரமேஸ்வரா ரோட் - பலாலி ரோட் சந்திக்கும். பரமேஸ்வரா ஒழுங்கை - பலாலி ரோட் சந்திக்குமிடையிலுள்ள பலாலி ரோட்டில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தால் தயவுசெய்து "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1229

**விற்பனைக்கு**

காணி!

12 1/2 பரப்பு பனங்காணி விற்பனைக்கு கோண்டாவில் கிழக்கில் இருக்கின்றது. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். விலாசம்: திருமதி அ. தியாகராசா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1222

**தேவை**

நிர்வாக வேலையில் உதவி செய்வதற்கு ஆங்கில அறிவுடைய பெண் லிகிதர் உடனே தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம். 1226, C/o ஈழநாடு', யாழ்ப்பாணம். 1226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் தாக்கப்பட்டார்: வசன கர்த்தாவுக்கு கத்திவெட்டு

யாழ்ப்பாணம், சனி

ஒரு நாடகம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது நடிகர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று திருநெல்வேலியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறிப்பிட்ட ஒரு பகுதியினரை அந்த நாடகத்தில் தாக்கிப் பேசியதாகவும் இதனால் கோபங்கொண்ட சிலர் மேடையில் ஏறி நடிகரைத் தாக்கியதோடு, கதை வசனகர்த்தாவையும் கத்தியால் வெட்டியதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. அந்த நாடகத்தின் பெயர் பழிக்குப்பழி என்பதாம்.

கோப்பாய் பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர். சந்தேகநபர் இருவர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. (கா. நி)

## தப்பியோடினராம்

யாழ்ப்பாணம், சனி

பொலிஸ் பாதுகாப்பிலிருந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரிடமிருந்து தப்பி ஓடிவிட்டார்.

நவிண்டிலைச் சேர்ந்த செல்லப்பா குலசேகரம் என்பவரே தப்பியோடிய சந்தேக நபராவார். களவொன்று சம்பந்தமாக கைது செய்யப்பட்டு பொலிஸ்பாதுகாப்பிலிருந்த போதே இவர் தப்பியோடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிபர் இதுசம்பந்தமான விசாரணையை மேற்கொண்டுள்ளார். [கா. நி]

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தடுத்து. 'கியூ' வரிசையில் போய் நிற்கும்படி கேட்டாராம். சுவாமியும் அப்படியே நின்று பஸ் ஏறியதாக ஓர் அன்பர் மூலம் கேள்விப்பட்டேன்.

மஞ்சள் உடை தரித்த புத்தபிக்குவாக இருந்தால் கியூ வரிசையில் நிற்காமலே பஸ்ஸில் ரிசர்வ் செய்துள்ள ஆசனத்தில் உட்காரவைப்பர். ஆனால் காவி உடைதரித்த தமிழ் சந்நியாசி என்றால் தமிழ் கண்டக்டரே கதிக்காமல் கியூ வரிசையில் நிற்குமாறு கேட்பதாகவும். சைவத் துறவிகளையும், குருமார்களையும் தமிழ் கண்டக்டர்மார்களே மதித்து மரியாதை செய்வதில்லையென்றும் அந்த அன்பர் மிக வேதனையுடன் கூறினார்.

ஒருவேளை தமிழ்த் துறவிகள் காஷாயத்தை விட்டுவிட்டு மஞ்சள் உடை தரித்தால்தான் இங்கு இ. போ. ச. வில் மரியாதை கிடைக்கும்போலும்! தென்பகுதியில் சிங்கள கண்டக்டர்கள் கூட தமிழ்த் துறவிகளுக்கு மரியாதை காட்டுகிறார்களாம். தமிழ்ப் பகுதிகளிலே இ. போ. ச. மேலதிகாரிகள் இதைக் கவனித்து, சைவ குருமார்களுக்கும் துறவிகளுக்கும், மற்ற சமய குருமார்களைப் போல் மதிப்பளிக்கும்படி செய்வார்களா?

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்து சிறிய எழுத்தாணி வேண்டுமென்று சா. கணேசன் அவர்கள் கேட்டிருந்த செய்தியை 'ஈழநாடு' பத்திரிகையில் பார்த்ததும், கொக்குவில் இ. சோமசுந்தர ஐயர் அவர்கள் தம்மிடமிருந்த யானைத்தந்தப் பிடிபோட்ட அழகான எழுத்தாணியை கரவெட்டிக்குச் சென்று, ஐயருக்காகக் காத்திருந்து அதை அன்புடன் கொடுத்ததும், அவர் இரு கைகளையும் நீட்டி அதை நன்றியுடன் வாங்கிக்கொண்டு, கையெழுத்துப் புத்தகத்தில் கீழ்க்கண்ட வெண்பாவை எழுதித்தந்துள்ளார்.

"அருமை எழுத்தாணி
அன்பளிப்பாய்த் தந்த
திரு சோமசுந்தரனார்
சீர்மை — பெருமையுடன்
என்றும் நினைந்து மகிழ்ந்து
இன்புறுவேன் என்றாலும்
நன்றி யிங்கே சொல்வேன்
நயந்து"

ஐயருக்கு மிகப்பெருமையும் மகிழ்ச்சியும். எவ்வளவு பணமும் இந்த இன்பம் அளிக்குமா? 'ஈழநாடு' பத்

# தமிழர்........

[1-ம் பக்கத் தொடர்ச்சி

னும் நீதியுடனும் நடக்கத் தவறிவிட்டார்களென அடித்து எழுதினோம். மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் ஊழியர்களை எதிர்நோக்கும் பிரச்னையால் பொருளாதாரத்தில் எவ்வளவோ நாம் இழக்கக்கூடிய நிலை ஏற்படும்.

சென்றமுறை இங்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சராக இருந்த எம். டி. எச். ஜயவர்த்தனவிடம் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி தேவையில்லை என்று விளக்கியதன் காரணமாக அவர்கள் சிங்களம் கற்கவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது.

701 சுற்றறிக்கையின்படி ஜி. சி. ஈ. சித்தியடைந்து பொலிஸ் கான்ஸ்டபிளாக சேர்ந்தவர் 3-ம் கிரேட் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும். ஆனால் 8-ம் வகுப்புச் சித்தியடைந்து பொலிஸ் கான்ஸ்டபிளாகச் சேர்ந்தவர் 2-ம் கிரேட் சிங்களச் சித்திபெற்றால் போதுமாம். இப்படியான பல விஷயங்களைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடனும் கலந்தாலோசித்தோம். ஆனால் அவர் அந்த விளக்கத்தை எடுத்துக் கூறியபொழுது ஏற்க மறுத்துவிட்டார். இதனால் பலர் உயர் பதவி, நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள்.'

(5-ம் கலத் தொடர்ச்சி)

முது சுகாதார அத்தியட்சகர் காரியாலயம் இருக்கும் காணியிலும் கட்டலாம். நீண்டகாலத் திட்டத்தை மனதில் வைத்து சிகிச்சை நிலையம் கட்டவேண்டும். தற்பொழுது மின்சார நிலைய காணியில், சிகிச்சை நிலையத்தைக் கட்டினால், 50 வருடத்தின்பின் மீண்டும், வேறு ஒரு இடத்தில், ஆஸ்பத்திரி கட்டவேண்டியநிலை உருவாகலாம்.

விக்ரோரியா வீதியில் உள்ள காணிகளில் சிகிச்சை நிலையத்தை கட்டினால் 50 அல்லது 100 வருடத்தின் பின் விக்ரோரியா வீதியை மூடி ஆஸ்பத்திரியை மேலும் விஸ்தரிக்கமுடியும்.

திரிகைச் செய்தி உடன் பயன்அளித்ததைக் கண்டு எமக்கும் மகிழ்ச்சிதான்.

ஃ ஃ ஃ

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
— அப்பர் சுவாமிகள்.

## மூவருக்கு பிரயாவிடை

யாழ்ப்பாணம், சனி

மகரிஷி சுத்தானந்த பாரதியார், ஸ்ரீ சத்புருஷ தேசிகர், திரு. சா. கணேசன் இவர்கள் மூவரும் நேற்றுக் காலை இந்தியாவுக்கு விமான மூலம் புறப்பட்டுச் சென்றனர். விமானநிலையத்தில் அவர்களை வழியனுப்பிவைக்கப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். இலங்கை சைவபரிபாலனசபை சார்பாக முதலியார் முத்துத்தம்பியும் மற்றும் நிர்வாகிகளும் ஸ்ரீ தேசிகருக்கு மலர் மாலை சூட்டி மரியாதை செய்தனர்.

யாழ்ப்பாணத்தில்

## மின்சாரக்கருவி வெடித்தது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மின்சார நிலையத்துக்கு முன்னாலுள்ள மின்சாரப் பரிமாற்றக் கருவி [கேபிள்] நேற்றுத் திடீரென வெடித்ததால் நேற்றிரவு நகரின் பல இடங்களில் சில மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

## தேசிய சுவீப் முடிவுகள்

வவுனியா, வெள்ளி

நேற்று வவுனியாவில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 202வது சுவீப்பில் பரிசுபெறும் முதல் மூன்று டிக்கட்டுகளின் இலக்கங்கள் பின்வருமாறு:

முதலாவது பரிசு
40 F 0425 ரூ. 100,000

இரண்டாவது பரிசு
43 E 0253 ரூ. 40,000

மூன்றாவது பரிசு
48 Z 0854 ரூ. 10,000

தலா ரூபா 668½ கொண்ட 100 டிக்கெட்டுகளின் விபரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 14 A 0002 | 26 A 0467 |
| 20 A 0692 | 09 A 0727 |
| 07 A 0882 | 04 B 0396 |
| 40 B 0311 | 21 B 0763 |
| 23 B 0987 | 09 B 0104 |
| 30 B 0936 | 34 B 0975 |
| 14 C 0561 | 26 C 0943 |
| 28 C 0576 | 39 D 0205 |
| 10 E 0283 | 43 E 0493 |
| 41 E 0436 | 04 E 0910 |
| 29 F 0356 | 41 F 0535 |
| 31 F 0212 | 17 G 0203 |
| 22 G 0369 | 25 G 0039 |
| 24 G 0847 | 36 G 0233 |
| 13 H 0547 | 07 H 0536 |
| 18 H 0527 | 05 H 0288 |
| 41 J 0568 | 02 J 0578 |
| 15 J 0315 | 18 J 0860 |
| 12 J 0034 | 12 J 0707 |
| 03 K 0773 | 06 K 0383 |
| 20 K 0264 | 39 L 0876 |
| 32 L 0188 | 19 L 0553 |
| 20 L 0217 | 38 L 0151 |
| 24 L 0794 | 28 L 0783 |
| 15 M 0257 | 12 M 0505 |
| 18 M 0102 | 09 N 1000 |
| 20 N 0086 | 05 N 0872 |
| 06 N 0875 | 03 N 0578 |
| 18 O 0271 | 27 O 0800 |
| 36 O 0773 | 07 O 0558 |
| 30 O 0609 | 17 O 0032 |
| 19 O 0359 | 38 P 0982 |
| 13 P 0331 | 23 Q 0610 |
| 44 Q 0403 | 22 R 0206 |
| 31 R 0277 | 27 R 0378 |
| 20 S 0458 | 37 T 0207 |
| 26 T 0898 | 38 T 0767 |
| 25 U 0879 | 11 U 0203 |
| 12 U 0617 | 20 U 0135 |
| 36 U 0673 | 32 U 0135 |
| 06 V 0587 | 11 V 0008 |
| 16 V 0830 | 31 V 0771 |
| 25 V 0177 | 23 W 0163 |
| 28 W 0273 | 28 W 0367 |
| 07 W 0402 | 33 W 0199 |
| 40 X 0752 | 44 X 0218 |
| 21 X 0666 | 37 X 0010 |
| 07 X 0820 | 37 X 0044 |
| 13 Y 0408 | 34 Y 0187 |
| 09 Y 0836 | 28 Z 0890 |

# "முற்போக்கு சக்திகளுடன் தமிழர் சேரவேண்டும்"

## உரிமைகளைப்பெற கெனமன் கூறும் யோசனை

யாழ்ப்பாணம், சனி

"தமிழ்ப்பேசும் மக்களின் எதிர்காலம் சுபீட்சமாக இருக்க அவர்கள் இலங்கையிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் சேரவேண்டும். இதற்கு தற்போது தமிழ் பிரதேச முதலாளித்துவ சக்திகள் சாதாரண மக்களை முற்போக்குச் சக்திகளுடன் சேர எதிர்ப்பாயிருக்கிறார்கள். இதனை உடைத்தெறிந்து தமிழ்மக்கள் முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து தமது உரிமைகளைப்பெற முன்வரவேண்டும்"

இவ்வாறு திரு. பீட்டர் கெனமன் தெரிவித்தார்.

யாழ் நகர மண்டபத்தில் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நேற்று நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வெள்ளி விழாவில் இவர் மேலும் பேசியதாவது:

தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து எதைத்தான் பெற்றது. இறுதியில் மாவட்டசபையும் இதே நிலைக்குத்தான் வந்துவிட்டது. தமிழரசுக்கட்சி, தமிழர்களின் எல்லா உரிமைகளையும் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திற்கு விற்றுவருகின்றது. இதனை அதன் வாலிப முன்னணியே எதிர்க்கின்றது. கட்சியிலிருந்து விலக்கப்பட்ட தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினமே இதனை அண்மையில் ஆட்சி மன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் மக்கள், தாங்கள் நியாயமான உரிமைகளைக் கோருவதற்கு முன்னர் தமக்குள்ளிருக்கும் சாதிப் பாகுபாட்டை ஒழிக்கவேண்டும். சிம்மாசனப் பிரசங்கத்தில் இதுசம்பந்தமான திருத்தப் பிரேரணையொன்றையும் தாம் கொடுத்துள்ளதாகவும் திரு. பீட்டர் கெனமன் குறிப்பிட்டார்.

முன்னாள் செனட்டர் பொ. நாகலிங்கம், திரு. அ. விசுவநாதன் உட்பட இன்னும் பலர் பேசினர். கா.நி

# மூவர் கைது, இரு கார்கள் பொலிஸ் பாதுகாப்பில்

## கடத்தப்பட்ட மாணவியை காணோம்

நல்லூர், சனி

வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஒரு பாடசாலையில் கல்விகற்கும் பதினெட்டுவயது மாணவி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டதாக சங்கானைப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சந்தேகத்தின் மீது மூவர் கைதுசெய்யப்பட்டு இம்மாதம் 17-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர், சந்தேகத்தின்மீது கைப்பற்றப்பட்ட இரண்டு மோட்டார்களும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் மாணவி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அவரைப்பற்றிய தகவலும் கிடைக்கவில்லையாம். சங்கானைப் பொலிசைச்சேர்ந்த சார்ஜண்ட் ஸின்ட்ரா புலன் விசாரணை செய்துவருகின்றார்.

# 158 கூட்டங்களில் பேசினார்; 500 பாடல்கள் பாடினார்

## கவியோகி தாய் நாடு திரும்பினார்

யாழ்ப்பாணம், சனி

'தாயிடமிருந்து குழந்தை பிரிவதுபோல் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். இங்கு நான் 158 கூட்டங்களில் பேசினேன். 10 சாதனக் கூட்டங்கள் நடத்தினேன். 500 பாடல்கள் பாடினேன். இன்னும் எனக்குத் தொண்டுசெய்ய வேண்டுமென உள்ளம்துடிக்கிறது.'

கவியோகி சுத்தானந்த பாரதி நேற்று விமானத்தில் சென்னை புறப்பட்டபோது பலாலி விமான நிலையத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

இவரை யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பலர் விமானநிலையத்தில் வழியனுப்பி வைத்தார்கள்.

இலங்கையில் தான்கண்ட காட்சிகளும், அன்பர் காட்டிய ஆர்வமும் தன் உள்ளத்தை உருக்கிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்

வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் கட்ட

# காணி சுவீகரிக்கப்படுவதை இவர்களும் எதிர்க்கிறார்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் நிலையம் கட்டுவதற்காக, யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சொந்தமான மின்சாரநிலைய காணியும், அருகில் உள்ள வீதியும் சுவீகரிக்கப்படுவதை முன்னாள் மேயர்களான திரு. ஏ. ரி. துரையப்பா, திரு ரி. எஸ். துரைராசா ஆகிய இருவரும் ஆட்சேபிப்பதாக நேற்று தெரிவித்தனர்.

தேர்தல் நடைபெற்று புதிய சபை நிறுவப்பட்ட பின்னரே இதுபற்றி முடிவு செய்யப்படவேண்டுமென திரு. துரையப்பா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது! முன்னர் ஆஸ்பத்திரி விஸ்தரிப்பிற்காக, அருகில் உள்ள வீதியை மட்டுமே கேட்டார்கள். தற்பொழுது ஆணையாளர் ஆட்சி நடைபெறுவதைப் பயன்படுத்தி மின்சார நிலையக்காணியையும் சேர்த்து எடுக்க தீர்மானித்துள்ளார்கள். இது பிழையான செயலாகும். மேலும் பஸ் நிலையத்திற்கு அருகில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைப்பது நோயாளருக்கு பெரும் கஷ்டத்தை கொடுக்கும்.

திரு. ரி. எஸ். துரைராசா கூறியதாவது: ஜனநெருக்கடியும், போக்குவரத்து அதிகமும் உள்ள மின்சார நிலையக்காணியில், சிகிச்சை நிலையம்அமைப்பது பொருந்தாது. முன்னர் மாநகர சபை இதனை ஆட்சேபித்தது.

விக்ரோறியா வீதிக்கு அப்பால் அநேககாணிகள் உண்டு அக்காணிகளில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தைக்கட்டலாம். தற்பொ

(2ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேல வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org